பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 10 திங்கட்கிழமை 25.11.2024 கதிர் 018

# இனப்பிரச்சினை தீர்வுக்கு நிபந்தனையற்ற ஆதரவு

## ராஜித சேனாரத்ன அறிவிப்பு

தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்கி, தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண ஆளும்தரப்பு முன்னெடுக்கும் பயணத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க தயாராக இருக்கிறோம். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்பதே எமது நோக்கமாகும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் கொழும்பில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். மேலும் தெரவித்ததாவது:

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தனது கொள்கை விளக்க உரையில், இனவாதத்தால் இரத்த ஆறு ஓடிய வரலாறுகொண்ட இந்த நாட்டில், மீண்டும் அந்த நிலைக்கு இடமளிக்கப்போவதில்லை எனத் தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கூற்றை வரவேற்கிறேன். நாட்டின் அபிவிருத்திக்கு தேசியப் பிச்சினை தீர்வு முக்கியமாகும்.

மக்கள் விடுதலை முன்னணி 1980 ☞ 2

## இனிது ரகசியம் அல்ல!

பொதுத் தேர்தலையொட்டியும் அதன் பின்னரும் ரெலோவுக்குள் உட்கட்சிமுரண்பாடு உச்சம் என்பதை அவ்வப்போது இந்தப் பத்தியில் சொல்லி வந்திருக்கின்றேன். ஓரிரு சமயங்களில் அது பகிரங்கமாகவும் வெடித்திருக்கின்றது. அப்படித் தலைமைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்பவர்களை கட்சிக்குள் கருவறுப்பதுதான் ரெலோவின் வழமை. இப்போதும் அதைத்தான் செய்வதற்கு முயற்சிக்கிறார்கள். ☞ 2

## எம்.பிக்களுக்கான செயலமர்வு இன்று தொடக்கம்

இன்று முதல் 3 நாட்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வு நடைபெறவுள்ளது.

செயலமர்வு காலை 9.30 முதல் மாலை 4.30 வரை நடைபெறவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். ☞ 2

## கனமழைக்கு கிழக்கில் வாய்ப்பு

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பகுதியை சூழவுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பகுதியை சுற்றி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு தொடர்ந்து வளர்ச்சியடைந்து நாட்டின் கிழக்கு கடற்கரைக்கு அருகில் நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அமைப்பின் தாக்கம் காரணமாக, நாடளாவிய ☞ 2

## இலங்கை படை அதிகாரிகளுக்கு தடை விதிக்கும்படி கோரிக்கை

இலங்கையின் உள்நாட்டுப்போரின்போது போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட மூவருக்கு எதிராக தடைகளை விதிக்குமாறு சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு பிரித்தானியாவைக் கேட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஷவேந்திர சில்வா, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையான் ஆகியோருக்கு எதிராகத் தடைகள் விதிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் குழுவான சமாதானம் மற்றும் நீதிக்கான இலங்கை பரப்புரைப் கோரிக்கை விடுத்துள்ளது.

பொறுப்புக்கூறலுக்கான உலகளாவிய இயக்கத்தை வலுப்படுத்தவும் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதற்கு ஆதரவளிக்கவும் ஐக்கிய இராச்சியத்துக்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

ஐ.நா.வினால் நிறுவப்பட்ட இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தின் தொடர்ச்சியான முயற்சிகள் சாட்சியங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீதியை மேம்படுத்துதல் ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்துகின்றன,

ஆனால் சர்வதேச அழுத்தம் ☞ 8



## தலைமன்னாருக்கான கப்பல் சேவை குறித்து ராமேஸ்வரத்தில் ஆய்வு

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து தலைமன்னாருக்கான பயணிகள் கப்பல் சேவையை முன்னெடுப்பதற்கான இடவசதிகள் தொடர்பில் ☞ 8

## நாம் மாவீரர்களை வைத்து அரசியல் செய்யமாட்டோம்

### மக்களோடு நின்று அஞ்சலிப்போம் என்கிறார் சாணக்கியன்

மாவீரர் வாரம் தொடங்கியுள்ள நிலையில் அவர்களை வைத்து அரசியல் செய்யமாட்டோம். மக்களோடு மக்களாக நின்றி அவர்களை அஞ்சலிப்போம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு குருமண்வெளியில் நேற்று நடைபெற்ற வரவேற்பு நிகழ்வொன்றின் போதே இதனை தெரிவித்தார். அவர் மேலும் ☞ 8

## மாவீரர் நிகழ்வுகளுக்கு தடை ஏதும் கிடையாது

### அமைச்சர் சந்திரசேகரன் உறுதி

மக்கள் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்துவதற்கு தடை ஏதும் கிடையாது. அவர்கள் நினைவேந்தல்களை தாராளமாக நடத்தலாம். அதுகுறித்த அறிவுறுத்தல்கள் படைத் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

மாவீரர் தின ☞ 8

## வருடாந்த ஊக்குவிப்பு கேட்கிறது மின்சார சபை ஊழியர்கள் சங்கம்

ஊழியர்களுக்கு வருடாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குமாறு இலங்கை மின்சார சபை நிர்வாகத்திடம் இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

டிசெம்பர் 10க்கு முன்னர் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு ☞ 2

## அமைச்சர் டக்ளஸின் ஊழல்கள் விசாரிக்கப்பட்டேயாக வேண்டும்

### கடற்றொழிலாளர் கூ.ச. சமாச உப தலைவர் வலியுறுத்து




சிங்களவர்கள் கடற்றொழில் அமைச்சராக இருந்ததிலும் பார்க்க தமிழரான டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த காலத்தில்தான் வடக்கில் சட்டவிரோத மீன்பிடித்தொழில் ஊக்குவிப்பட்டு கடல் வளம் அழிக்கப்பட்டது. டக்ளஸின் ஊழல்கள் குறித்து ☞ 8

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் மக்கள் ஆதரவற்ற கட்சிகளோடு இனியும் கூட்டு அவசியம்தானா?

### ரெலோ தலைவர் செல்வத்தின் செயலர் கேள்வி



மக்கள் ஆதரவற்ற, ஜனநாயகத் தமிழ்த்

தேசியக் கூட்டணயில் உள்ள ஏனைய கட்சிகளோடு இனிமேலும் கூட்டுச் சேர்ந்து பயணிப்பது அவசியம்தானா? அல்லது ரெலோ இனிமேல் தேர்தல்களில் தனித்துப் போட்டியடுவதா என்பது குறித்து கட்சி உறுப்பினர்கள் முடிவு செய்யும் காலம் வந்துவிட்டதாக அந்தக் கட்சியின் மன்னார் மாவட்ட மாவட்ட அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளருமான டானியல் வசந்தன் தெரிவித்தார். ☞ 2

## இந்திய மீனவர்கள் தொப்புள்கொடி உறவுகளாயினும் வளத்தை சூறையாடவிடமுடியாது

### கடற்றொழில் அமைச்சர் திட்டவட்டம்

தொப்புள்கொடி உறவுகளாக இருந்தாலும் சரி ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகளாக இருந்தாலும் சரி இந்திய மீனவர்கள் எமது வளங்களைச் சூறையாடுவதற்கு இடமளிக்க முடியாது என்று கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் சந்திரசேகன் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அதன் விளைவாக முரண்பாடு மேலும் உச்சமடைந்துள்ளன.

ரெலோவின்யாழ்.மாவட்டஅமைப்பாளரும் வடக்கு மாகாண சபை ன் முன்னாள் உறுப்பினருமான விந்தன் இப்போது கட்சியின் பொதுக் குழுவை உடன்பூட்டும்படி கேட்டு செயலாளர் கருணாகரத்திற்கு கடிதம் எழுதியுள்ளார். அடுத்த பொதுக் குழுவில் விந்தனையும் ஹென்றி மகேந்திரனையும் வேறு சிலரையும் கட்சியைவிட்டுத் தூக்குவதற்கு தலைமை காய் நகர்த்தி வரும் நிலையில், கிளர்ச்சியாளர்களைத் தவிர்த்துவிட்டுக் கூடட்டத்தை நடத்தவே திட்டமிடப்படும் நிலையில் விந்தனின் கடிதம் வெளியாகி இருக்கிறது.

அதன்விவரத்தைஅப்படியேதருகின்றேன்.

கோ.கருணாகரம்,
செயலாளர் நாயகம்,
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்(ரெலோ)

அன்புடையீர்,

விடயம், உடனடியாக கட்சியின் மத்திய குழுவினை கூட்டுதலும் அனைத்து மத்திய குழு உறுப்பினர்களுக்கும் உரிய முறையில் அழைப்பிதழ் அனுப்புதலும்.!

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சி சார்பில் நானும் ஒரு வேட்பாளராக போட்டியிடுவதற்கு 02/10/2024 அன்று எமது கட்சியின் திருகோணமலை காரியாலயத்தில் நடத்தப்பட்ட ரெலோவின் தலைமைக்குழு கூட்டம் ஏக மனதாக முடிவெடுத்திருந்தது. குறித்த தலைமைக்குழு கூட்டத்திற்கு எமது கட்சியின் வடக்கு கிழக்கு மாவட்ட செயலாளர்களும் துணை மாவட்ட செயலாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். குறித்த கூட்டத் தீர்மானத்திற்கு மாறாக பின்பு எனது பெயர் வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்தது.

இது விடயமாகவும், தேர்தல் காலத்தில் எமது கட்சியின் பெயரை பயன்படுத்தி எமது கட்சி சார்ந்த சில வேட்பாளர்கள் சில தொழில் நிறுவனங்களிடம் பல கோடிகள் பெற்றது தொடர்பாகவும், அந்த நிதியில் இருந்து எமது கட்சி சார்பில் ஏனைய மாவட்டங்களில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு சம பங்கீடு ஒதுக்கப்படாதது தொடர்பாகவும், பெற்றுக்கொண்ட நிதித்தொகைகள் விவரம் தொடர்பாகவும் எமது கட்சி சார்ந்த சிலர் கடந்த ஆளும்தரப்பிடம் பன்முகப்படுத்தப்பட்ட விசேட நிதி ஒதுக்கீடு மூலம் பல கோடிகள் பெற்று அதில் இருபது கோடியினை ஒரு வேட்பாளருக்கு மட்டும் ஒதுக்கி, எமது கட்சியின் ஏனைய வேட்பாளர்களும் அவர்கள் பிரதி நிதித்துவப்படுத்தும் மாவட்டங்களும் திட்டமிடப்பட்டு புறக்கணிக்கப்பட்டது தொடர்பாகவும் மக்கள் மத்தியில் நன் மதிப்பும் செல்வாக்கும் இல்லாத, பல நாடாளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்டு படு தோல்வி அடைந்தவர்களை மீண்டும் மீண்டும் கட்சி சார்பில் வேட்பாளராக நிறுத்துதல் தொடர்பாகவும் இந்த நிகழ்வுகளின் எதிரொலியாகவும் பிரதிபலிப்பாகவும் தேர்தல் காலங்களில் எமது கட்சியினரால் நடத்தப்பட்ட ஊடக சந்திப்புக்கள் உட்பட இன்னும் பல விடயங்கள் தொடர்பாகவும் கூடிப் பேசுவதற்கு ஏதுவாக இம்மாதம் இருபத்தியெட்டு அல்லது இருபத்தியொன்பதாம் திகதிகளில் எமது கட்சியின் மத்திய குழுவினை கூட்டவும்.

மேலும் கட்சியின் மூத்த உறுப்பினரும் கட்சியில் கடந்த நாற்பது வருடங்களாக தொடர்ச்சியாக பயணிப்பவரும் கட்சியின் தலைமைக்குழு உறுப்பினரும் கட்சியின் நிர்வாகச் செயலாளரும் கட்சியின் முன்னாள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம், யாழ்ப்பாணம் மாநகரசபை, வடக்கு மாகாணசபை போன்றவற்றின் உறுப்பினருமான எனக்கு அறிவிக்காமல் கடந்த 20.11.2024 அன்று குறிப்பிட்ட சிலருடன் இணைய (சூம்) வழியாக தாங்கள் தலைமைக்குழு கூட்டத்தை கூட்டியதும் கவலையளிக்கின்றது!

நன்றி,
என்.விந்தன் கனகரட்ணம்,
நிர்வாகச் செயலாளர்,
தலைமைக்குழு உறுப்பினர்,
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்(ரெலோ)

நேற்று இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பொதுக் குழுக் கூட்டத்திலும் விந்தன் சண்டைக்குத் தயாராக நிற்கிறார் என்பதாலும் கட்சிக்குள் அவருக்கு ஆதரவுத் தளம் அதிகம் என்பதாலும் பொதுக் குழுவில் தமது நோக்கம் நிறைவேறாமல் போய்விடக்கூடும் என்ற அச்சம் காரணமாகவும் அவர் கேட்கின்ற காலத்தில் பொதுக்குழுவைக் கூட்டும் துணிச்சல் கட்சித் தலைமைக்கு இருப்பதாக நான் நினைக்கவில்லை. எனவே இந்த மாதத்தில் ரெலோவின் பொதுக் குழு நடப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதுதான் என் கணிப்பு.

இப்படித் தமது கட்சிக்குள் உள்ள பிணக்குகளையே தீர்த்து ஒற்றுமைப்பட முடியாத ரெலோ தலைவர்தான் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை குறித்து அடிக்கடி பீற்றிக்கொள்கிறார். இரண்ட நாள்களுக்கு முன்னரும்கூட தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமைக்காக என்றும் பாடுபடுபவன்தான் என்று கூறியிருந்தார். ஆனால் உள்வீட்டுக் குழப்பத்தின்போது மட்டும் அவர் ஒற்றுமைக்காகப் பாடுபடமாட்டார், விட்டுக் கொடுக்கவும்மாட்டார். ஏனென்றால் அது தனது தலைமைக்கான ஆபத்தல்லவா. அதனால் அந்த ஆபத்தை உருவாக்குபவர்களை கட்சியைவிட்டு விரட்டியடிப்பாரே தவிர அவர்களிடம் ஒற்றுமை பற்றியெல்லாம் பேசமாட்டார். தமக்குப் பதவிக் கதிரைகள் கிடைக்கும் என்றாலம் மட்டும்தான் ஒற்றுமைக் குரல்கள் எல்லாம்.

எனக்குத் தெரிந்தவரை விந்தனை ரெலோ தூக்கி எறிந்தாலும் யாழ்ப்பாணத்தில் அவரை வாரி அணைத்துக்கொள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள மற்றைய மூன்று கட்சிகளும் தயாராகவே இருக்கின்றன. விந்தனுக்கான ஆதரவுத் தளம் என்ன என்பதும் தேர்தல் வேலைகளில் விந்தனின் திறமை என்ன என்பதும் அவற்றுக்கு நன்கு தெரியும்.

அரசுத்தலைவர் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு சார்பில் நிறுத்தப்பட்ட அரியநேத்திரனுக்காக ரெலோ சார்பில் யாழ்ப்பாணத்தில் வேலை செய்தவர்கள் விந்தனும் அவரது ஆதரவாளர்களும்தான். அவர்கள் பணியாற்றிய யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு போன்ற இடங்களில் முடிவுகள் என்ன என்பதை உலகமே அறியும்.

இதற்கிடையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் தமக்கு மட்டுமே மக்கள் ஆதரவு இருக்கின்றது என்று ரெலோ தலைவரின் செயலாளர் டானியல் தெரிவித்திருக்கின்றார். அதனால் மக்கள் ஆதரவற்ற கட்சிகளுடன் சேர்ந்து இனியும் பயணிப்பதா என்று ரெலோ உறுப்பினர்கள் முடிவு செய்யவேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தேர்தலில் அவரது கட்சித் தலைவர் செல்வம் பெற்றது வெறும் 5 ஆயிரம் விருப்பு வாக்குகள் மட்டும்தான். இலங்கையிலேயே ஆகக் குறைந்த விருப்பு வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் அவர்தான். அதுவும் 20 வருடங்களுக்கும் மேலாக ஒரே மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய பின்னர் அவர் பெற்ற வாக்கு எண்ணிக்கை இது. இதை வைத்துத்தான் தமக்கு மக்கள் ஆதரவு இருக்கின்றது என்றும் மற்றவர்களுக்கு அது இல்லை என்றும் சொல்லியிருக்கிறார் டானியல். வீடு கொழுத்துகிற ராசாவுக்கு கொள்ளி எடுத்துக்கொடுக்கும் மந்திரிகள் என்று இதைத் தான் சொல்வார்கள் போலும்...

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## இனப்பிரச்சினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலப்பகுதியில் முன்னெடுத்துவந்த புரட்சியினால் நாடு குருதிச் சகதியில் மிதந்தது. இனவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டை அவர்கள் அன்று கடைப்பிடித்திருந்தால், நாட்டில் குருதயாறு ஓடி இருக்காது. வடக்கில் பிரிவினைவாதப் போர் ஏற்பட்டிருக்காது. என்றாலும் அவர்களுக்கு அதிகாரம் கிடைத்துள்ள நிலையில் 35 வருடங்களுக்குப் பின்னராவது இந்த உண்மை அவர்களுக்கு புரிந்திருக்கிறது. அதனையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்காக நாங்கள் வடக்குக்கு சென்று போராடி இருக்கிறோம். அதேபோன்று முஸ்லிம் மக்களின் நியாயமான உரிமைக்காக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தோம். தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் மூலமே நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்ற கொள்கையிலே நாங்கள் இருந்து இருகிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை.

அதனால் தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்கி, தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண ஆளும்தரப்பு முன்னெடுக்கும் பயணத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க தயாராக இருக்கிறோம். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

நாங்கள் ஒருபோதும் அதிகாரத்துக்காக இனவாதத்தை கையில் எடுத்ததில்லை. நான் மாத்திரமல்ல, எமது தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் ஒருபோதும் அரசியல் அதிகாரத்துக்காக இனவாதத்தை கையில் எடுத்ததில்லை. ரணில் விக்ரமசிங்க புகழடைவதற்கான அரசியல் செய்யவில்லை. அவர் எப்போதும் அறிவுப்பூர்வமான தீர்மானங்களையே எடுத்துவந்தார். அதனால் அநுகுமார திசநாயக்கவும் பிரபல்ய அரசியல் செய்வதைவிடுத்து, அறிவுப்பூர்ணமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தேர்தலில் வடக்கு மக்களின் மனதை வெற்றிகொள்ள தேசிய மக்கள் சக்திக்கு முடியுமாகி இருக்கிறது. இது வரலாற்று வெற்றியாகும். மக்கள் விடுதலை முன்னணி தனது இனவாத, மதவாதத்தை நிராகரிப்பதற்கு வடக்கு மக்களின் ஆதரவும் காரணமாக இருக்கலாம். அதனால் தமிழ் மக்களின் தேவைகளை உணர்ந்து, அதனை நிறைவேற்றும் வகையில் ஆளும்தரப்பின் பயணம் இருக்க வேண்டும் என்றார்.

## வருடாந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையான கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடங்களில் இலங்கை மின்சார சபை நஷ்டம் காரணமாக ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்காத நிலையில், சபையின் நடப்பு இலாபத்தன்மையைக் கருத்திற்கொண்டு ஊழியர்களால் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நிதி முன்னேற்றம் இருப்பதாக கூறப்பட்டாலும், ஊழியர்களின் போனஸ் தொடர்பாக நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என தொழிற்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## நாம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

இது மாவீரர்களுக்கு உரிய அஞ்சலி செலுத்துகின்ற மாதமாகும் எங்களுடைய மக்கள் ஒன்றிணைந்து மாவீரர் துயிலும் இல்லங்களைதுப்புரவு செய்துவருகின்றார்கள். இவற்றைவிட சிலர் மாவீரர் துயிலும் இல்லங்களையும், மாவீரர்களையும் வைத்து அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இம்மாதம் 27ஆம் திகதி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மக்களோடு மக்களாக இருந்து நாங்களும் செயற்படுவோம். அந்த வீர மறவர்களுக்காக நாங்களும் மக்களோடு இருப்போம்.

மாறாக மாவீரர்களை வைத்து நாங்கள் அரசியல் செய்யப்போவதில்லை. பலர் மாவீரர் குடும்பங்களை கௌரவிப்புச் செய்கின்றோம் எனப் பலரிடம் பணம் பெற்றுள்ளார்கள். இதில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

அரசியல்வாதிகளாக உள்ள நாங்கள் செய்ய வேண்டிய பணி அஞ்சலி நிகழ்வுகளை செய்யும்போது மக்களுக்கு அச்சுறுத்தல்கள் வந்தால் நாங்கள் அதை பற்றி தட்டிக் கேட்க வேண்டும் என்பதுதான்.

தனி நாட்டுக்காகப் போராடிய ஒரு இனம் அந்தப் போராட்டத்திற்காக வாழ்க்கை அர்ப்பணித்தவர்களுக்கு நாங்கள் செய்ய வேண்டிய நன்றிக்கடன் இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்காக அரசியல் தீர்வு ஒன்றினை கோரிப் பயணிப்பது மட்டும்தான். அதனை நாங்கள் தமிழ் அரசுக் கட்சியாக முன்னெடுப்போம்.

அரசியல் தீர்வு வந்தால் மாத்திரம்தான் இந்த நாட்டிலே எமது தமிழ் மக்கள் உரிமையோடு கௌரவமாக தலைநிமிர்ந்து வாழலாம். இந்த நாட்டில் அரசியல் தீர்வு வந்தால் மாத்திரம்தான் அபிவிருத்தி, நாங்கள் விரும்பும் தேவைகளை செய்துகொள்ளலாம். இல்லையேல் தென்னிலங்கை ஆளும்தரப்பு போடும் பிச்சையிலே தான் வாழ வேண்டும்.

இலங்கையில் உள்ள தேர்தல் மாவட்டங்களில் தமிழ் மக்கள் சரியாக வாக்களித்த ஒரே ஒரு மாவட்டம் மட்டக்களப்பு மாத்திரம்தான். ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க நாடாளுமன்றத்தில் என்னுடன் பேசியபோது "மட்டக்களப்பில் மாத்திரம் தான் எம்மால் முடியாமல் போய்விட்டது" என்று சொன்னார். நான் அதற்கு பதிலளித்தபோது, "அது என் கையில்தானே இருக்கிறது. கள்ள வழியில் செல்பவர்களிடமோ கொலை செய்தவர்களிடமோ களவுகளில் ஈடுபட்டவர்களிடமோ மக்களுக்கு முன் அவதூறாகச் செயற்பட்டவர்களிடமோ இல்லை. என்னிடம் தானே இருக்கிறது" என தெரிவித்தேன்.

நாங்கள் மக்களோடு மக்களாக நின்று செயற்பட்டதன் காரணத்தால்தான் வரலாற்றுச் சாதனையாக மட்டக்களப்பில் அதிகூடிய விருப்பு வாக்குகளான 65,000 வாக்குகளால் மக்கள் என்னைத் தெரிந்தெடுத்தார்கள் - என்றார்.

## கனமழைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியில் பல பிரதேசங்களில் வானம் மேக மூட்டத்துடன் கனமாக இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளையில் பரவலாக மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கிழக்கு மாகாணத்தில் சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகளவான கனமழை பெய்யக்கூடும்.

வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும்.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது 30 முதல் -40 கி.மீ. வரை பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிக பலத்தகாற்றுமற்றும்மின்னல்தாக்கங்களினால் ஏற்படக்கூடிய விபத்துக்களை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொது மக்களிடம் கோரியுள்ளது.

## தொப்புள்கொடி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

வடமாகாணயாழ். மாவட்டகடற்றொழிலார் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு நேற்று வருகை தந்த அமைச்சர் சந்திரசேகரன் கடற்றொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினார். அதன் பின்னர் அவர் தெரிவித்ததாவது:

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் ஏற்படுவது பெரும் பிரச்சினையாகும். இரவு என்னைத் தொடர்பு கொண்டிருந்த மன்னார் பேசாலை மீனவர்கள் 200இற்கும் அதிகமான இந்திய இழுவை இயந்திரப் படகுகளுடன் எமது கடற்பரப்புக்கள் வந்திருக்கின்றன என்ற தகவலைத் தெரிவித்தார்கள்.

படகுகளின் இயந்திர அதிர்வை தரையில் இருந்தே உணர முடிகின்றது என்றும் தேரிவித்தார்கள். உடனடியாகவே கடற்படையினருக்கு தகவல் அனுப்பப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கைக்கடற்பரப்புஎமக்குச்சொந்தமானது. அதற்குள் இந்திய மீனவர்கள் பிரவேசிப்பதற்கு இடமளிக்க முடியாது. தொப்புள்கொடி உறவுகளாக இருந்தாலும் சரி ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகளாக இருந்தாலும் சரி எமது வளங்களை சூறையாடுவதற்கு இடமளிக்க முடியாது.

இந்திய மீனவர்கள் கடற்பரப்புக்குள் நுழைகின்றமையானது எமது மக்களின் தலைவிதியுடன் விளையாடுகின்ற விளையாட்டாகும். எமது மக்களின் வாழ்க்கையுடன் விளையாடுகின்ற விளையாட்டாகும். ஆகவே இந்திய மீனவர்களிடமும், இந்திய அதிகாரிகளிடமும் நாம் இந்த விளையாட்டை நிறுத்துமாறு மிகவும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

## எம்.பிக்களுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த செயலமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகம், நாடாளுமன்ற சிறப்புரிமைகள், நாடாளுமன்றத்தின் சட்டவாக்க செயற்பாடுகள், நாடாளுமன்ற குழு முறைமை, நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள், அரசமைப்பின் ஏற்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir

# நான் அரசியல் பாதையை நோக்கி நகர லயன்ஸ் கழகங்களே முதற் காரணம்

## யாழ். மாவட்ட எம்.பி. ரஜீவன் பெருமிதம்

லயன்ஸ் கழகமே என்னை அரசியல் பாதையை நோக்கி கொண்டு சென்றது என தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டுள்ள ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தியை பாராட்டும் நிகழ்வு லயன்ஸ் கழகத்தினரால் வெள்ளிக்கிழமை கொழும்பு செட்டித்தெருவில் அமைந்துள்ள சூர்யா ஹோட்டலில் நடைபெற்றவேளை, அதில் கலந்துகொண்டு ஏற்புரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது

லயன் நண்பர்கள் இந்த தேர்தலில் ஒரு நடுநிலையான அமைப்பாக செயற்பட்டுள்ளார்கள். பல்வேறு விருப்பு-வெறுப்புக்கள், அரசியல் தெரிவுகள் காணப்பட்டாலும், அதனையும் தாண்டி தங்களது ஓர் உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டுள்ளதை வரவேற்கும் விதத்தில் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளமை பெரும் மகிழ்வை ஏற்படுத்துகிறது. நான்



நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் கலந்துகொண்ட முதல் நிகழ்வு இது.

லயன்ஸ் கழகம்தான் என்னை இந்த பாதையில் கொண்டுசென்றது. நாம் பல்வேறு வேலைத்திட்டங்களை இணைந்து மேற்கொண்டோம். சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டோம்.

நாடாளுமன்ற உறுப்பினராக மக்களுக்கு நான் சேவையாற்ற வேண்டும் என கடவுள் நினைப்பதாக நான் கருதுகின்றேன்.

அரசியலில் பல விடயங்களை இன்னமும் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. எனக்கு இன்னமும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற உணர்வு ஏற்படவில்லை. அரசியலில் இருந்துகொண்டும் லயன்ஸ் கழகத்துக்கு சேவை செய்வேன். -என்றார்.

இந்த நிகழ்விற்கு தலைமை தாங்கிய லயன் சந்திரசேகர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது -

சங்கானை லயன்ஸ் கழகம் யாழ்ப்பாணம் சிட்டி நியுசென்சரி லயன்ஸ் கழகத்துக்காக பல சேவைகளில் பங்குபற்றியவர். ரஜீவனின் வெற்றிக்கு காரணம் அவரது சேவையே. - என்றார்.

மேலும் லயன் எஸ். நிமால் செல்வரட்ணம் தெரிவிக்கையில் -

இந்த நிகழ்வை நாங்கள் எந்த கட்சிக்கும் ஆதரவளிப்பதற்காக ஏற்பாடு செய்யவில்லை. மாறாக லயன் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதை வாழ்த்துவதற்காகவே இங்கு கூடியுள்ளோம்.

ரஜீவன் எப்போதும் நியாயத்துக்காக, அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுப்பவர். ஆசிரியராக பணியாற்றியவேளை பல உதவிக் மாணவர்களுக்கு கரம் நீட்டியவர். லயன்ஸ் கழகத்தைப் பயன்படுத்தி பல மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் உதவினார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் கல்விச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வு காண்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் உதவவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.



லயன்ஸ் கழகம் போன்றவற்றில் நான் ரஜீவனுடன் இணைந்து பணியாற்றியுள்ளேன்.

நியுசென்சரி லயன்ஸ் கழக உருவாக்கத்தில் அவரது பங்களிப்பு மிகப்பெரியது.

ரஜீவன் பல விடயங்களை உருவாக்கியவர். கொக்குவில் பாடசாலை அதிபர்.

வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புகளுக்காக செல்வோருக்காக வகுப்புகளை எடுத்தவர்.

மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். அரசாங்க அங்கீகாரம்பெற்ற மொழிபெயர்ப்பாளர், கல்விமான்.

இரண்டு கட்சிகளிலும் யாரை தொடர்புகொள்வது என தெரியாத நிலையில் உள்ளோம். கல்வி தொடர்பிலான உதவிகள் தேவைப்படுகின்றன என அவர் தெரிவித்தனர்.

ரஜீவன் எப்போதும் வெளிப்படையாக பேசுபவர் சரியான விடயங்களுக்காக குரல் கொடுப்பவர். நீதியின் பக்கம் நிற்பவர். அரசியல் வாழ்விலும் இதனை அவர் தொடரவேண்டும், பின்பற்றவேண்டும். சரியான விடயங்களுக்காக குரல்கொடுக்க வேண்டும் என இதன்போது கலந்துகொண்ட முக்கியஸ்தர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

# ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த முன்னுரிமை தரவேண்டும் அநுர

## எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பால்

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதாக தேர்தல் பிரசாரத்தின்போது அளித்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து செயற்படவேண்டும் என எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஊடக சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம், தகவல் சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில் பிரான்ஸின் பாரிஸ் நகரைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பால் (ரிப்போட்டர்ஸ் வித்தௌட் போர்டர்ஸ்), ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு புதிய அரசாங்கம் முன்னுரிமை அளிக்கவேண்டும் என வலியுறுத்தி வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாவது -

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றுமுடிந்த பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று வெற்றியீட்டிருக்கிறது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் உரியவாறு தண்டனை வழங்கப்படாததும், ஊடக சுதந்திரத்தை அச்சுறுத்தும் வகையிலான ஒடுக்குமுறைச்சட்டங்களைக் கொண்டதுமான நாட்டில் முறையான நிலைமாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவாறான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளவேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

அதற்கமைய இப்புதிய அரசாங்கம் அவசியமான கட்டமைப்பு மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதுடன், தணிக்கைக்கு வழிகோலும் ஒடுக்குமுறைச்சட்டங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்தோடு குறிப்பாக தமிழ், முஸ்லிம் சிறுபான்மையின சமூகங்களைச்சேர்ந்த ஊடகவியலாளர்கள் உள்ளடங்கலாக சகல ஊடகவியலாளர்களுக்குமான நியாயமான பாதுகாப்பு செயன்முறையை அறிமுகப்படுத்தவேண்டும்.

சுதந்திரமானதும், பாதுகாப்பானதுமான ஊடக இடைவெளியை உறுதிப்படுத்துவதாக தேர்தல் பிரசாரத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதியை நடைமுறைப்படுத்துவதற்கு தற்போதைய புதிய நாடாளுமன்றத்தில் முன்னுரிமை அளிக்கவேண்டும்.

இலங்கையின் அண்மையகால வரலாற்றில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியிருப்பதுடன், அவை ஊடகங்கள் கொண்டிருக்கும் மிகமுக்கிய வகிபாகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் சார்ந்து தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு உடனடியாக முடிவுக்குக்கொண்டுவரப்படவேண்டும்.

ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு அவசியமான ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு இந்த வரலாற்று முக்கியத்தும் மிக்க வாய்ப்பை புதிய அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

அதேவேளை ஊடகங்களின் சுதந்திரமான இயங்குகைக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய சர்ச்சைக்குரிய சட்டங்கள் மற்றும் சட்டமூலங்கள் நீக்கப்படுவதுடன், பயங்கரவாதத்தடைச்சட்டம் மற்றும் சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச்சட்டம் என்பன ஊடகவியலாளர்களுக்கு எதிராகத் தவறான முறையில் பிரயோகிக்கப்படுவதை உடனடியாக முடிவுக்குக்கொண்டுவரவேண்டும் என அவ்வமைப்பு வலியுறுத்தியுள்ளது.

# இயக்கச்சி இராவணன் வனத்தில் பொன்.சுதன் தந்தை சிலை உடைப்பு



நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் பொன் சுதனின் தந்தையின் சிலை, கும்பலொன்றால் உடைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இயக்கச்சி பகுதியில் அமைந்துள்ள இராவணன் வனப் பகுதியில் சுதனால் அவரது தந்தையின் சிலை நிறுவப்பட்டது. இந்தச் சிலையின் முகப்பகுதியை விசமிகள் சிலர் கடந்த வியாழக்கிழமை உடைத்துள்ளனர்.

இதனையடுத்து, உடனடியாக கண்காணிப்பு கெமராவை ஆய்வு செய்தபோது சம்பவதினத்தன்று சிசிரிவி கெமரா நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக சுதன் தெரிவித்துள்ளார்.

தன் மீதான அரசியல் முரண்பாட்டால் இந்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனவும், திடீரென சிசிரிவி கெமரா நிறுத்தப்பட்டதையும் பொலிஸாரின் கவனத்துக்குகொண்டுசென்றதாகவும் சுதன் மேலும் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து, பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உருப்படியான தீர்வே அவசியம்

தொப்புள்கொடி உறவுகளாக இருந்தாலும் சரி ஒருதாய் வயறிற்றுப்பிள்ளைகளாக இருந்தாலும் சரி இந்திய மீனவர்கள் எமது வளங்களைச் சூறையாடுவதற்கு இடமளிக்க முடியாது என்று கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் சந்திரசேகன் தெரிவித்திருக்கிறார்.

புதிதாக அமைச்சுப் பொறுப்பை ஏற்றிருக்கும் அவர் மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் பேசும்போது இதனைத் தெரிவித்திருக்கிறார்.

எல்லை தாண்டி வந்து இலங்கைக் கடலில் மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் தொடர்பிலேயே, குறிப்பாகத் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்பிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழ் இனத்தவரான அவரது இந்தக் கூற்று அழுத்தமானது. பொருள் நிறைந்தது.

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளராகவும் கடந்த பல வருடங்களாகப் பணியாற்றி வரும் அவர், இந்திய மீனவர்களின் அச்சுறுத்தலால் இலங்கை மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டிருப்பதற்கான வாய்ப்புக்களை மறுக்கமுடியாது. அதனால் அவரது கருத்து வெளிப்பார்வைக்கு தற்துணிபுடன் கூடியதாகத் தெரிந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியங்கள் எவ்வளவு என்பதுதான் இங்குள்ள கேள்வி.

இந்திய இழுவை மடிப் படகுகளின் பிரச்சினை கடந்த ஒருசில வருடங்களில் ஏற்பட்டதல்ல. கடந்த 20 வருடங்களுக்கு மேலாகவே தொடரும் பிரச்சினை. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் அவர்கள் வைத்திருந்த படகுகளிலும் பார்க்க மேம்பட்ட பெரிய படகுகளில் வலுவான இயந்திரங்களோடுதான் அவர்கள் இப்போது இலங்கை எல்லைக்குள் அத்துமீறுகிறார்கள். அதாவது இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதில் காணப்பட்ட பலவீனம் அத்துமீறுபவர்களைப் பலப்படுத்தியிருக்கின்றது. அதன் விளைவாகவே வடக்கு மீனவர்கள் இந்தியப் படகுகள் தொழிலுக்கு வரும் நாள்களில் கடலுக்குச் செல்வதற்கு அஞ்சும் நிலை ஏற்பட்டுள்ளது.

சட்டங்களை இறுக்குவதும் உயர்ந்த அபராதங்கள் விதிப்பதும் படகுகளைப் பறிமுதல் செய்வதும் மீண்டும் மீண்டும் எல்லை தாண்டுபவர்களை சிறையில் அடைப்பதும் அத்துமீறலைத் தடுக்கப் போதுமானவையாக இல்லை என்பது கண்கூடு. பேச்சு மூலமும் மாற்று வழிகள் மூலமு-மே இதற்கொரு தீர்வைக் காண முடியும். எனவே மேடைப் பேச்சுக்களில் அன்றி உருப்படியான வழிகளில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புதிய கடற்றொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவே இன்றைய தேவை.

# அணு ஆயுத தாக்குதல் நடத்துமா ரஷ்யா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

2025 ஜனவரியில் வெள்ளை மாளிகையைவிட்டு வெளியேறும் ஜோ பைடன், உக்ரேனுக்கான உதவிகளை விரைவுபடுத்த முயன்று வருகிறார்.

பிரேஸிலில் ஜி-20 மாநாட்டில் ஜோ பைடன் கலந்துகொண்டு உரையாற்றும்போது,





உக்ரைனின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை காப்பாற்ற முழுமையான ஆதரவை வழங்கவுள்ளதாக தெரிவித்திருந்தார்.

ரஷ்யாவிற்கு ஆதரவாக வடகொரிய படைகள் களமிறக்கப்பட்ட பின்னர் இந்த தீர்மானத்தை அமெரிக்க மேற்கொண்டுள்ளதாகவும், உக்ரைனுக்காக பைடனின் இறுதி முயற்சி இதுவெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு எதிர்மறையாக அமெரிக்காவின் அடுத்த அதிபராக பொறுப்பேற்க இருக்கும் டொனால்ட் டிரம்ப், உக்ரேனுக்கான ஆதரவை குறைப்பார் அல்லது நிறுத்துவார் என தெரிவிக்கபடுகிறது. ரஷ்யாவுக்கு எதிரான போரில் யுக்ரேனுக்கு ஆயுதங்களை வழங்குவதில் அமெரிக்க அரசே முன்னணியில் உள்ளது.

மீண்டும் அமெரிக்காவின் ஜனாதிபதியாகும் டொனால்ட் ட்ரம்ப் எதிர் காலத்தில் உக்ரைனுக்கு ஆதரவு வழங்கப்படாது என கூறியமை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பலத்த கண்டனத்துக்கும் உள்ளாகியது.

### ஏவுகணை பாவிக்க பைடன் அனுமதி:

உக்ரேன் அரசு ஏடிஏசிஎம்எஸ் ஏவுகணையைப் பயன்படுத்தலாம் என்ற பைடனின் அனுமதி, வட கொரிய வீரர்களை உக்ரேனில் சண்டையிட அனுமதிக்கும் ரஷ்யாவின் முடிவிற்கு பதிலடியாக வந்தது என்று சில அமெரிக்க அதிகாரிகள் நியூயார்க் டைம்ஸ் மற்றும் வாஷிங்டன் போஸ்ட் ஊடகங்களிடம் கூறியுள்ளனர்.

ஏடிஏசிஎம்எஸ் ஏவுகணைகள் 300கிமீ வரை செல்லக் கூடியவை. ரஷ்யாவுக்குள் தாக்குதல் நடத்த அமெரிக்கா வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரேன் பயன்படுத்த அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அனுமதி அளித்துள்ளார்.

ஜோ பைடனின் முடிவு போரின் போக்கை மாற்றும் ஒன்று அல்ல. ஆயினும் உக்ரேனிய



படைகளை மேலும் வலிமை கொண்டதாக மாற்றும் என கருதப்படுகிறது.

ரஷ்யா - உக்ரேன் போரில் அமெரிக்கா கடைபிடித்து வந்த கொள்கையின் முக்கிய மாற்றமாக இந்த நடவடிக்கை பார்க்கப்படுகிறது. உக்ரேனின் அதிபர் விலோடிமிர் ஜெலென்ஸ்கி, ஏடிஏசிஎம்எஸ் (ATACMS) எனப்படும் ஏவுகணைகள் மீதான

கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும் என்று பல மாதங்களாக வலியுறுத்தி வருகிறார். இந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டால் உக்ரேன், தனது நாட்டின் எல்லைக்கு அப்பாலும் அதனை பயன்படுத்தி தாக்குதல் நடத்த முடியும்.

### உக்ரேன் போரில் டிரம்ப் நிலைப்பாடு:

பிற நாடுகளுக்கான ராணுவ உதவிகளால் அமெரிக்காவின் வளங்கள் வீணாகின்றன என்பது ட்ரம்ப் அரசின் கருத்தாகும். தன்னால் போரை முடிவுக்கு கொண்டு வர முடியும் என்று கூறிய அவர், அதை எவ்வாறு செய்யப் போகிறார் என்று வெளிப்படையாக இதுவரை கூறவில்லை.

2022 பெப்ரவரி போரின் தொடக்கத்திற்கும் ஜூன் 2024 இறுதிக்கும் இடைப்பட்டகாலத்தில், உக்ரேனுக்கு 55.5 பில்லியன் அமெரிக்க டாலர்



மதிப்புள்ள ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை அமெரிக்கா வழங்கியுள்ளது.

இத்தகைய உதவிகளையும், உக்ரேனுக்கான ஆதரவை பாரியளவில் குறைப்பார் அல்லது நிறுத்துவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

### நேட்டோ நேரடி பங்கேற்பு:

இந்நிலையில், உக்ரைன் நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்தினால் மோதல் மேலும் தீவிரமடையும் எனவும் தகுந்த பதிலடி வழங்கப்டும் எனவும் ரஷ்யா எச்சரித்துள்ளது.

நீண்ட தூர ஏவுகணை கட்டுப்பாடுகளை நீக்குவது, உக்ரேன் போரில் நேட்டோ ராணுவ கூட்டணியின் நேரடி பங்கேற்பை பிரதிநிதித் துவப்படுத்தும் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் மேற்கத்திய நாடுகளுக்கு முன்பே எச்சரிக்கை விடுத்திருந்தார்.

கடந்த ஆகஸ்டில் உக்ரேன் திடீரென தாக்குதலைத் தொடங்கி தனது கட்டுப்பாட்டில் இருக்கும் ரஷ்ய நிலப்பரப்பின் சிறு பகுதியை தக்க வைத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு உதவுவோம் என பைடனின் நிர்வாகம் உறுதியளிக்கிறது.

வருங்கால பேச்சுவார்த்தைகளில் இந்த நிலப்பரப்பை ஒரு பேரம் பேசும் கருவியாக பயன்படுத்தலாம் எனவும் உக்ரேன் அரசு நினைக்கிறது.

ஏடிஏசிஎம்எஸ் ஏவுகணை பற்றிய அமெரிக்காவின் முடிவு என்பது, ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்திற்குள் உக்ரேனிய படைகளின் பாதுகாப்புடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

### அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படுமா?

அமெரிக்கா வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தும் பட்சத்தில், அந்நாட்டின் மீதான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த இருப்பதாக ரஷ்யா எச்சரித்துள்ளது.

ரஷ்யா மீது தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் ராணுவ உதவி வழங்கி வருகின்றன. அதன் அடிப்படையில், நீண்ட தூரம் சென்று இலக்குகளை துல்லியமாக தாக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கி இருந்தது.

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# அணு ஆயுத தாக்குதல் நடத்துமா ரஷ்யா?

4ம் பக்கத் தொடர்ச்சி...........

நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு பைடன் அனுமதி வழங்கியுள்ளார்.



இந்த ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தும்பட்சத்தில் ரஷ்யாவுக்கு தீவிர பாதிப்பு ஏற்படும். இந்தச் சூழலில், உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த ரஷ்யா முடிவு செய்துள்ளது. இதற்கேற்ப தன் அணு ஆயுதக் கொள்கையில் ரஷ்யா மாற்றம் கொண்டு வந்துள்ளது.

அணு ஆயுதம் இல்லாத நாடு (உக்ரைன்), அணு ஆயுதம் வைத்திருக்கும் நாட்டுடன் (அமெரிக்கா) கூட்டணி வைத்து ரஷ்யா மீது போர்த் தாக்குதல் மேற்கொண்டால், பதிலுக்கு அந்நாட்டின் மீது ரஷ்யாவும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் என்று ரஷ்யா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பாலிஸ்டிக் ஏவுகணை உள்ளிட்ட நவீன ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் ரஷ்யா மீது வான்வழித் தாக்குதல் அதே மேற்கொள்ளப்படும் பட்சத்தில், பதிலுக்கு அணு ஆயுதங்களைப் பயன்படுத்த நேரிடும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.

**போரில் வடகொரிய துருப்புகள் :**

ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் இருந்து உக்ரேனியப் படைகளை வெளியேற்றுவதற்காக திட்டமிடப்பட்ட ரஷ்ய - வடகொரிய துருப்புகளின் கூட்டுத் தாக்குதல் சில நாட்களில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குர்ஸ்க் பகுதியில் 11,000 வட கொரிய வீரர்கள் இருப்பதாக அறியப்படுகிறது. அதனை முறியடிக்க ரஷ்யாவிற்குள் நீண்ட தூர 'ஸ்டார்ம் ஷேடோ' (Storm shadow) ஏவுகணைகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்த உக்ரேனுக்கு அனுமதி அளிக்கக்கூடும்.

உக்ரேனின் கிழக்குப் பிராந்தியங்களில் உள்ள ரஷ்ய துருப்புகளைத்தாக்குவதற்கு முதன்முறையாகஅமெரிக்கா வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரேன் பயன்படுத்தியதாக ஜெலென்ஸ்கி உறுதிப்படுத்தினார்.

உக்ரேனிய படைகளுக்கான முக்கிய விநியோக மையமாக இருக்கும் போக்ரோவ்ஸ்க் நகரை நோக்கி மெதுவாக முன்னேறி வரும் ரஷ்ய துருப்புகளை பின்னுக்குத் தள்ள,

உக்ரேன் பல மாதங்களாக போராடி வருகிறது.

ஏடிஏசிஎம்எஸ் ஏவுகணைகள் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும் என்று

பல மாதங்களாக வலியுறுத்தி வருகிறார். உக்ரேன் பல மாதங்களாக அதன் நட்பு

நாடுகள் தனக்கு போதுமான ஆதரவை வழங்கவில்லை என குற்றம் சாட்டியுள்ளது.

# வவுனியா பல்கலையில் விசேட நிகழ்வு ஏற்பாடு



உலகளாவிய தொழில் முனைவோர் வாரம் அனுஸ்டிக்கப்பட்டு வரும் நிலையில் வவுனியா பல்கலைக்கழகத்தில் விசேட நிகழ்வு ஒன்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபார இணைப்பு அலகும் இங்கிலாந்திலுள்ள ஏஎரிஈ நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள நிகழ்கால மற்றும் எதிர்கால முயற்சியாளர்களுக்கான முக்கிய செயலமர்வு இடம்பெற்றது.

இதன் போது இந்திய துணை தூதர் சாய் முரளி மற்றும் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஏ.அற்புதராஜா உட்பட இந்திய மற்றும் வவுனியா பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட சுயதொழில் முயற்சியாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.









காலைக்கதிர் Kalaikkathir

# விபத்தில் இறந்த இருவரின் சடலங்கள் உறவினர்களிடம் நேற்று கையளிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தின் இரு வேறு இடங்களில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை- அக்கரைப்பற்று பிரதான வீதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் சம்பவ இடத்தில் உயிரிழந்திருந்தார்.

சம்பவ தினமன்று வேகமாக நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்ற நிலையில் அம்மாணவன் கனரக வாகனம் ஒன்றுடன் மோதுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் நிந்தவூர் அல் அஸ்ரக் தேசிய பாடசாலையில் உயர்தர பிரிவில் கல்வி கற்கும் 18 வயதுடைய பாரூக் முஹம்மது சீத் என அடையாளம் காணப்பட்டார். அத்துடன் இவரது சடலம் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு திடீர் மரண விசாரணை அதிகாரியின் பிரசன்னத்துடன் மரண விசாரணை இடம்பெற்று உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டது.

இது தவிர சடலத்தின் பாகங்கள் மேலதிக விசாரணைக்காக அரச பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இது தவிர சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீரமுனை பகுதியில் கடந்த வியாழக்கிழமை மாலை வீதியில் சென்ற மாடு ஒன்றுடன் மோதலை தவிர்ப்பதற்காக மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த 23 வயது மதிக்கத்தக்க மதன் பவி லக்சான் என்ற இளைஞன் அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதி படு காயமடைந்தார். பின்னர் சிகிச்சைக்காக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அங்கு உயிரிழந்திருந்தார். கிராம சேவகரது மகனான இவ்விளைஞன் வீடுதிரும்பும்வழியில் இந்த விபத்திற்கு முகம் கொடுத்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சடலத்தை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் பார்வையிட்டு மரண விசாரணை மேற்கொண்டதுடன் உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார். பின்னர் குறித்த பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் கடந்த சில தினங்களாக அம்பாறை மாவட்டத்தில் அதிகளவான விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பேராறு அணை வான் கதவுகள் திறப்பு அவதானமாக இருக்கும்படி கோரிக்கை



வவுனியா, பேராறு அணையின் கீழ் பகுதியில் வசிப்பவர்களை அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களாக வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக தாழ்நிலங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளதுடன், குளங்களின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

அந்தவகையில் பேராற்றுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளமையால் அதன் 2 வழிகால்களும் ஓர் அடி உயரத்திற்கு திறக்கப்பட்டுள்ளன. இதனால் நீர் செல்லும் பகுதியிலும், பேராறு அணையின் கீழ் பகுதியிலும் வசிப்பவர்கள் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (100 )

# அர்ச்சுனா எம்.பிக்கு எதிரான முறைப்பாடுகளின் விசாரணைகள் இன்னமும் ஆரம்பமாகவில்லை

## பொலிஸ் பேச்சாளர் தகவல்



நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் அவருக்கு எதிராக சிஐடியினரிடம் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் இன்னமும் ஆரம்பமாகவில்லை என பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்டுவ தெரிவித்துள்ளார்.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர் முகநூலில் பதிவு செய்த கருத்து தொடர்பில் சிவில் சமூக பிரதிநிதிகள் சிலர் சிஐடியினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்துக்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தனர். எனினும் விசாரணைகள் ஆரம்பமாகவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவாரத்திற்குள் நாங்கள் இதனை முழுமையாக ஆராயவேண்டு;ம் என தெரிவித்துள்ள அவர், சிஐடியின் இயக்குநரிடம் முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளனர், சிஐடியினர் அடுத்த சில நாள்களில் இது குறித்து தீர்மானிப்பார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஹெரோயினுடன் ஒருவர் பொரளையில் கைது

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மனிங் டவுன் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் குழுவொன்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் பொரளை பிரதேசத்தை சேர்ந்த 46 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 12 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில், சந்தேக நபர் பொரளை பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து திருடிய 03 தங்க சங்கிலிகள், 07 ஜோடி காதணிகள், தங்க வளையல், தங்க மோதிரங்கள், பதக்கங்கள், 07 கைக்கடிகாரங்கள், 09 வாசனை திரவிய போத்தல்கள் மற்றும் வெளிநாட்டு மதுபான போத்தல்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அதானி குழுமத்தின் திட்டங்கள் குறித்து இலங்கை இறுதிமுடிவு எடுக்கவில்லை

## அதிகாரிகள் தெரிவிப்பு



அதானி குழுமத்திற்கு எதிரான அமெரிக்காவின் குற்றச்சாட்டுகளை தொடர்ந்து உலக நாடுகள் அதன் திட்டங்கள் குறித்து ஆராய்ந்துவரும் நிலையில் இலங்கை அதானி குழுமத்தின் மீள்சக்தி திட்டங்கள் குறித்து இன்னமும் இறுதிமுடிவை எடுக்கவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மன்னார் பூநகரியில் அதானி குழுமத்தின் மீள்சக்தி திட்டங்கள் குறித்து ஆராயப்படுவதாகவும் எனினும் அவை குறித்து இன்னமும் இறுதிமுடிவை எடுக்கவில்லை எனவும் இலங்கை மின்சாரசபையின் பேச்சாளர் தனுஸ்க பராகிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காற்றாலை மின் திட்டம் குறித்த யோசனைகள் எதிர்வரும் வாரங்களில் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை அதனை ஆராய்ந்து இறுதிமுடிவை எடுக்கும், இந்த திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் ஆராயும் நிலையில் உள்ளோம். நிதிரீதியான சாத்தியப்பாடு சூழல் பாதுகாப்பு குறித்தும் ஆராய்கின்றோம் என இலங்கை மின்சாரசபையின் பேச்சாளர் தனுஸ்க பராகிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பாரிய திட்டங்கள் குறித்து வெளிப்படை தன்மை பொறுப்புக்கூறல் அவசியம் என மேலும் தெரிவித்துள்ள அவர், அதானி குழுமத்தின் நடவடிக்கைகள் குறித்த சர்வதேச கரிசனைகள் காரணமாக வெளிப்படை தன்மை அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

# கடல் நீரில் அள்ளுண்டவர் கடற்படையினரால் மீட்பு

பாணந்துறை கடற்பரப்பில் நீராடிக்கொண்டிருந்த ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் உயிர்காப்பு படையினரால் மீட்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை, வலான பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டு மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் அந்த நபரை மீட்டு, அடிப்படை முதலுதவிகளை வழங்கிய பின்னர், அவரை மேலதிக சிகிச்சைக்காக பாணந்துறை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

# சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளியின் பொதுச் செயலாளர் காலமானார்



(ஸாகிர்)

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் பொதுச் செயலாளரும், ஓய்வு பெற்ற உதவி அதிபருமான ஐ.எல்.எம்.மன்சூர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை காலமானார்.

இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையான அன்னாரின் ஜனாஸா மாளிகைக்காடு மஸ்ஜிதுல் ஸாலிஹீன் ஜும்ஆப் பள்ளிவாசல் அருகில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டு, மாளிகைக்காடு மஸ்ஜிதுல் ஸாலிஹீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டு, இன்று அதிகாலை (சுபஹ் தொழுகையின் பின்) மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப்பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

காலைக்கதிர் Kalaikkathir

# வாக்குகளை சிதறடித்து நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழக்கச் சில சிறிய கட்சிகளே காரணம் என்கிறார் ரிஷாத்



புத்தளத்து மக்களுக்கான நாடாளுமன்ற பிரதி நிதித்துவத்தை இலகுவாக பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இருந்தபோதும் அதனை இல்லாமல் செய்தவர்கள் 5 சதவீத வாக்குகளை பெற்றுக் கொள்ள முடியாத சிறிய கட்சிகளே. நாம் இவர்களுக்கு வாக்களிக்க வேண்டாமென கேட்டு வந்த போதும், அவர்களுக்கு மக்கள் வாக்களித்தமையே இப்பிரதிநிதித்துவம் பறிபோனமைக்கு காரணம் என்று தெரிவித்துள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன், இந்த வாக்குகள் குப்பைத் தொட்டிக்குள் போடப்பட்டனவாகிவிட்டது என்றும் கூறினார்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் போட்டியிட்ட வேட்பாளர்களான என்.ரீ.தாஹீர் மற்றும் சட்டத்தரணி முஹம்மட் ஆகியோரின் இல்லத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் இங்கு அவர் பேசுகையில் –

கூட்டணி தொடர்பில் பேசப்பட்ட போதும், இந்த கூட்டணியின் வேட்பாளர்கள் தொடர்பில் மக்களின் நம்பிக்கை ஏற்படவில்லை.இதற்கான காரணமாக கடந்த கால அவர்களின் செயற்பாடாகும். இதனால் தான் தான் இம்முறை தேசிய கட்சியொன்றில் போட்டியிடுவதன் மூலம் நாடாளுமன்ற பிரதி நிதித்துவத்தை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் பற்றி நீண்ட கலந்துரையாடலின் பின்னர் முடிவு எட்டப்பட்டது.

புத்தளம் மாவட்டத்தில் 3 தசாப்தங்களாக நாடாளுமன்ற அதிகாரம் இல்லாமல் இருந்த போது முதன் முதலாக புத்தளத்தின் சிரேஷ்ட அரசியல்வாதியான அல்–ஹாஜ்.எம்.எச்.எம்.நவவி அவர்களுக்கு தேசியப் பட்டியல் வழங்கி, அதன் பிற்பாடு அடுத்த தேர்தலில் கூட்டமைப்பு அமைத்து பல அரசியல் கட்சிகளை ஒன்றுசேர்த்து நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொடுப்பதிலும், இந்த தேர்தலில் வியூகம் அமைத்து ஒன்றுக்கு மேற்பட்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றுக்கொள்வதாக இருந்தால் ஒரு லட்சத்து 20 ஆயிரம் வாக்குகள் புத்தளம் மாவட்டத்தில் உள்ளதால் அதில் 30 ஆயிரம் வாக்குகளை ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு அளிப்பதன் அவசியம் தொடர்பில் நாம் பேசிவந்தோம்.

ஆனால் மக்கள் இது தொடர்பில் கரிசனை செலுத்தாது வாக்களித்தன் பலன் நாம் எதிர்பார்த்த எமது நாடாளுமன்ற



பிரதி நிதியை இழந்துள்ளோம்.

இன்றுஇந்தமக்கள்மத்தியில்கவலைஏற்பட்டுள்ளது.எமக்கான ஒரு நாடாளுமன்ற பிரதி நிதித்துவத்தை இழந்துள்ளமையே, சில பகுதிகளில் வாழும் எமது மக்களின் பஞ்சமும்,வறுமையும் சில கட்சிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளது. எமது புத்தளம் மக்களுக்கு ஏதும் அனர்த்தம் ஏற்பட்டால் தேர்தல் காலத்தில் உங்களுக்கு காசு கொடுத்தவர்கள் வருவார்களா எனக் கேட்கவிரும்புகின்றேன்.

தேர்தல் முடிந்ததும் நான் இன்று உங்களது மாவட்டத்திற்கு வருகைத்தந்துள்ளேன். ஏனெனில் நாம் இந்த மக்களை நேசிப்பவன் என்பதால், நாங்கள் இன்று உங்களுடன் கலந்துள்ளோம்.இது என்றும் நாமும்,எமது கட்சியும் உங்கள் மீது கொண்டுள்ள அன்பாகும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

மிகவும் குறைந்த வாக்குகளின் வித்தியாசத்தில் தாஹிர் அவர்கள் தோல்வியை தழுவியமை பெரும் கவலையைத்தருகின்றது.அவர் வெற்றி பெறுவார் என்ற திட்டத்தை வகுக்க வேண்டும் என்று மேடை மேடையாக நாம் சொன்னோம். சிலர் அதனை புரிந்து கொள்ளாமல்





செயற்பட்டமையைப் பார்க்க முடிந்தது.

புத்தளம் மக்களின் அரசியல் என்பது எம்முடன் பின்னிப் பிணைந்தது. கடந்த கால அரசியல் அதிகாரங்களின் போது நாம் பல்வேறு அபிவிருத்திகளைச் செய்துள்ளோம். பாடசாலை, மதத்தளங்கள், வைத்திய சாலைகளுக்கான தேவைப்பாடுகள், மின்சார வசதிகள், மீனவ சமூகத்திற்கான உதவிகள், பாதைகள், வாழ்வாதார திட்டங்கள் என சிலவாகும்.

எனவே நீங்கள் மனம் தளராது எமது கட்சியுடன் இணைந்து பயணியுங்கள். அடுத்துவருகின்ற உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் நாம் சிந்தித்து, ஜதார்த்தத்தை புரிந்து கொண்டு புத்திசாதுரியமாக செயற்பட வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது என்ற வேண்டுகோளை முன் வைப்பதுடன், கௌரவமான முறையில் இதனை அடைந்து கொள்ள புத்தளம் மக்கள் ஒன்றுபடுவதன் அவசியத்தையும்,அதே போன்று எமது கட்சியின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கு நன்றிகளையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதியுதீன் இதன் போது தெரிவித்தார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



## மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் ரெலோ கட்சிக்காக பல்வேறு வகையிலும் உதவி புரிந்த கட்சியின் உறுப்பினர்களுடனான சந்திப்பும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வும் நேற்றுமதியம் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது. நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றிய டானியல் வசந்தன் தெரிவித்ததாவது:

எமது கட்சியின் தலைமையை மீண்டும் நாடாளுமன்றம் அனுப்ப பல வழிகளிலும் உதவி புரிந்த உங்களுக்கு எனது நன்றிகள்.

ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் போட்டியிட்டன. அந்த 5 கட்சிகளில் 4 கட்சி வேட்பாளர்கள் தோல்வியடைந்தனர்.தமிழீழ விடுதலை இயக்கம் மட்டுமே இந்தத் தேர்தலில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை பெற்றுடுள்ளது.

எனவே இனிமேலும் மக்களிடத்தில் ஆதரவு அற்ற கட்சிகளை ஒன்றிணைத்துக் கொண்டு நாங்கள் பயணிப்பதா?அல்லது ரெலோ இனிமேல் தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவதா? என்ற கேள்வியை உங்களிடம் முன்வைக்க விரும்புகின்றோம்.

நாங்கள் என்னதான் சொன்னாலும் மக்கள் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளனர். ஐந்து கட்சிகளை ஒன்றிணைத்து பலத்துடன்போட்டியிடுகின்றோம்என நாங்கள் நினைத்துக்கொண்டு இருக்கின்றோம். மக்கள் எமது கூட்டிற்கு ஆதரவு வழங்குவார்கள், நாங்கள்தான் ஒற்றுமையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம், ஐந்து போராட்ட குழுக்கள் ஒன்றாக நிற்கின்றோம், நாங்கள் கடந்தகாலங்களில்மக்களுக்காக ஆயுதம்ஏந்தி போராடியவர்கள், எனவே எங்களுக்குத்தான் மக்களின் ஆதரவு இருக்கிறது என்று நாங்கள் எண்ணி இருந்தோம்.

அந்த எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டார்கள். தனித்துப் போன இலங்கைத்தமிழ்அரசுகட்சிநினைத்ததுநடந்து விட்டது. எங்களைத் தவறானவர்களாகவும், அவர்களைச்சரியானவர்களாகவும்காண்பித்து இந்தத் தேர்தலில் வடக்கு கிழக்கில் தமிழ் அரசுக் கட்சி 8 ஆசனத்தை வென்றுள்ளது.

உண்மையில் இது எமது அரசியல் இருப்பிற்கு ஒரு கேள்விக்குறியாகி உள்ளது. எனவே இனி வருகின்ற தேர்தல்களில் நாங்கள் தோற்போமாக இருந்தால் எமது கட்சியின் நிலை கேள்விக்குறியாகிவிடும்.

கடந்த காலங்களில் ரெலோ போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளது.எனவேஉங்களின்ஒத்துழைப்பை நாங்கள்தொடர்ந்தும்எதிர்பார்க்கிறோம். எமது கட்சியின்உறுப்பினர்களைநம்பியேநாங்கள் அரசியலை முன்னெடுக்க உள்ளோம் என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்துஉரைநிகழ்த்தியநாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இத்தேர்தலில் தனது வெற்றிக்காக பாடுபட்ட அனைத்துஉறுப்பினர்களுக்கும்நன்றிகளை தெரிவித்ததோடு,கட்சி எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினார்.

## தலைமன்னா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாடு கடல்சார் துறையின் தலைவர் வள்ளலார் தலைமையிலான அதிகாரிகள் ஆராய்ந்துள்ளனர்.

இந்தவிடயம்தொடர்பில்கருத்துரைத்துள்ள தமிழக கடல்சார் துறையின் தலைவர் வள்ளலார், இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையிலான கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான ஆய்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கடல் வளம், பாதுகாப்பு மற்றும் கடற்றொழில் என்பவற்றுக்கு ஏற்றவகையில் கடல் போக்குவரத்து வழித்தடம் அமையும். முதற் கட்டமாக 100 முதல் 150 பயணிகள் பயணிக்கக்கூடிய வகையிலான கப்பலைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர், பாம்பன் குந்துகால், அக்னி தீர்த்தம், வில்லுண்டி தீர்த்தம், தனுஷ்கோடி குருசடை தீவு உள்ளிட்ட சுற்றுலா தளங்களைப்படகில்பார்வையிடும்வகையில் கப்பல் போக்குவரத்தை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

இராமேஸ்வரத்தின்தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் வரை 1914ஆம் ஆண்டு முதல் 1964ஆம் ஆண்டு வரை கப்பல் போக்குவரத்து இயக்கப்பட்டதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. பின்னர் ஏற்பட்ட காலநிலை சீர்கேடு மற்றும் இலங்கையின் உள்நாட்டுப் போர் போன்றவற்றின் காரணமாகக் இந்தக் கப்பல் சேவை நிறுத்தப்பட்டது.

## இலங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாமல், இந்த முயற்சிகள் தடைபடும் அபாயம் உள்ளது என்றும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## மாவீரர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வுகளில் பங்கேற்போரைப் ஒளிப்படங்கள் எடுத்து அச்சுறுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

தொலைக் காட்சி ஒன்றின் அரசியல் நிகழ்ச்சியில் அமைச்சர் சந்திரசேகரன் இதனைத் தெரிவித்தார்.

''மாவீரர் தின நிகழ்வுகளை தமிழ் மக்கள் இம்முறை எந்தவிதமான கெடுபிடிகளும் அடக்குமுறைகளும் இல்லாமல் மேற்கொள்ளமுடியும். அதற்கு எந்த விதமான தடையும் கிடையாது. எனவே, மக்கள் சுதந்திரமான முறையில் மாவீரர் வாரத்தை அனுஷ்டிக்க முடியும். அது அவர்களின் உரிமை. அதற்கு அரசு தடைபோடாது'' - என்றார்.

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரிக்கவேண்டும் என்று வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசஉபதலைவர்நாகராசாவர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய கடற்றொழில் அமைச்சருடன் வடக்கு மாகாணத்தின் நான்கு மாவட்ட மீனவர் பிரதிநிதிகள் இணைந்து சனிக்கிழமை சந்தித்து கலந்துரையாடி இருந்தோம். இதன்போது கடற்றொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பில் மனு ஒன்றினைக் கையளித்து உடனடியாககவனத்தில்எடுக்கப்படவேண்டிய விடயங்களையும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

1996ஆம்ஆண்டுசட்டத்தின்அடிப்படையில் 16 தொழில்கள் இலங்கை அரசால் தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால் ஒவ்வொரு கடற்றொழில் அமைச்சரும் அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காது கிடப்பில் போட்டுள்ளனர். தற்போது புதிதாக பொறுப்பேற்றுள்ள நீங்கள் என்றாலும் 1996 சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதன்மூலம் சுருக்குவலை உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட தொழில்களை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்எனவும் இந்திய மீனவர்கள் எல்லைதாண்டி வருவதனை முற்றாக தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் அவரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

தென்னிலங்கையில் இருந்து வந்து வடமராட்சி கிழக்கு பகுதியில் தங்கியிருந்து ஐநூறுக்கு மேற்பட்ட படகுகளில் சட்டவிரோத தொழிலில்ஈடுபட்டுவருகின்றனர். இவர்களும் எங்களது வலைகளை அறுத்து எங்கள் வாழ்வாதாரத்தையும் அழித்து வருகின்றனர். இதன் மூலம் எங்களது கடல் வளம் பாதிக்கப்படுவதுடன் சட்டவிரோதமாக போதைப்பொருள் கடத்தலிலும் இவரகள் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த காலத்தில் ஒவ்வொரு படகிற்கும் 25 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை லஞ்சம் வாங்கியே இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவை குறித்தும் அமைச்சருக்கு சுட்டிக்காட்டி இனிமேல் வெளிமாவட்ட மீனவர்களுக்கு அனுமதி வழங்குவதனை நிறுத்துமாறு கோரியுள்ளோம்.

போர்க்காலத்தில்வடபகுதியில்மீன்உற்பத்தி 42வீதமாக இருந்ததுடன் தென்னிலங்கைக்கு அனுப்பியதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொடுத்திருக்கிறோம். ஆனால் போர் முடிவுக்கு வந்த பின்னர் இன்றுள்ள நிலையில் வடக்கு மீனவர்கள் சாப்பாட்டிற்கே வழியிலாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம். கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரம் முற்றிலுமாகபாதிக்கப்பட்டுள்ளதன்காரணமாக சமூகத்தில் ஏனைய தொழில் துறைகளும் பாதிப்புகளை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் இன்றுவரை கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படாமலே இருப்பதற்கு அதிகாரிகள், ஆளுநர்கள், அமைச்சர், கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகள் என சகல மட்டத்திலும் நிலவும் இலஞ்ச ஊழல் முறைகேடுகளே காரணம்.

எல்லை தாண்டிய சட்டவிரோத மீன்பிடி மற்றும் தடைசெய்யப்பட்ட தொழில்களை உடனடியாகமுற்றாகதடுத்துநிறுத்தவேண்டும். அவ்வாறு செய்தால் ஒரு சில வருடங்களில் வடக்கு கடல் வளம்பெறும். அவ்வாறான நிலைக்குவழியேற்படுத்தப்படுமாக இருந்தால் கடந்த காலத்தை போன்று கடலுணவு ஏற்றுமதி மூலம் அந்நியச்செலாவணியை பெற்றுக்கொள்ள முடியும்.

கடற்றொழில் அமைச்சராக தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் இருந்த காலத்தைவிட அந்த பதவியில் தமிழர் ஒருவர் முதன் முறையாக நியமிக்கப்பட்ட பின்னர்தான் சட்டவிரோதமான தொழில்கள் ஊக்கிவிக்கப்பட்டு வடக்கில் கடல் வளம் அழிக்கப்பட்டது. இத்தனை பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளது. திரும்பவும் தமிழ் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முதல்கடற்றொழில்அமைச்சராகஇருந்தவர் மேற்கொண்ட ஊழல்களை வெளிக்கொண்டு வருவதுடன் கடற்றொழில் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வினைக்காண நடவடிக்கை எடுக்கவேண்டும். மாற்றம் என்ற கோசத்துடன் மக்கள் ஆதரவுடன் ஆட்சியமைத்திருக்கும்அநுரகுமாரதிசநாயக்க அவர்கள் சில நடவடிக்கைகளை எடுத்ததைப் போன்று கடற்றொழில் விடயத்திலும் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் கடற்றொழில் மக்கள் உண்மையில் உங்களுக்கு பக்கபலமாக நிற்போம். அதைதவறும்பட்சத்தில்நாங்களும் மாற்று நடவடிக்கை தொடர்பில் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.

கடற்றொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா தன்னுடைய அரசியல் தேவைகளுக்காக கடற்றொழிலாளர் அமைப்புகளில் அரசியல் பின்னணிகொண்டவர்கள்நியமிக்கப்பட்டனர். இதற்கு யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரும்உடந்தையாகச்செயற்பட்டார். கடற்நொழிலாளர்சம்மேளனம், சமாசங்களை பிரித்து நியமன அடிப்படையில் நிர்வாகத்தில் அமைச்சரின் கட்சி சார்பானவர்களை நியமித்துள்ளதன் காரணமாக சம்மேளனம், சமாசங்கள் சிதைந்துபோய் மக்களை ஒருங்கிணைத்து கூட்டு செயற்பாட்டினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஊழலுக்கு எதிரான அரசாக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தலைமையிலான புதிய அரசு அமைந்துள்ள நிலையில், உடனடியாக சங்கங்கள், சமாசங்களுக்கான புதிய நிர்வாகங்களை ஜனநாயக முறைப்படி தெரிவுசெய்து வடமாகாண கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைகாண புதிய கடற்றொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# பத்து அம்சங்களை முன்வைத்து அநுரவுக்கு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய கடிதம்



புதிய அரசமைப்பினை உருவாக்குவதன் ஊடாக இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காணுதல் உட்பட பத்தம்சங்களை முன்வைத்து சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய கடிதமொன்றை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

மக்கள் வழங்கிய ஆணையை அனைத்து தரப்பினரும் மதிக்க வேண்டும் என்பதோடு நாட்டில் தேசிய ஒற்றுமைரூபவ் சாந்தி, சமாதானத்தை நிலைபெறச்செய்து சுபீட்சமான நாட்டில் அனைவரும் அச்சமின்றி இலங்கையர்களாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

அதனடிப்படையில் பின்வரும் விடயங்களில் அதிகமான கவனத்தினைக் கொள்கின்றேன். குறித்த விடயங்கள் வருமாறு,

1. ஜனாதிபதி மற்றும் பிரதமர் அரசாங்கத்தின் முதற் செயல்பாடாக நாட்டின் ஜனரஞ்சக கட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் சட்டத்தை மதிக்கும்ரூபவ் திறமையான பொதுநிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். விசேடமாக இலங்கையில் 14 பேருக்கு ஓர் அரச ஊழியர் என்ற விகிதம் மாற்றயமைக்கப்பட வேண்டும்.

2. நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல் ஆகியவற்றைதாமதமின்றி முன்னெடுக்கப்படவேண்டும்.

3. புதிய அரசமைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய அரசமைப்பு தொடர்பில் எட்டாவது நாடாளுமன்றம் சிறப்பான பணியை செய்துள்ளது. லால் விஜேநாயக்க மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவராக இருந்ததோடு மட்டுமன்றி அரசமைப்புக்கான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தவராகவும் உள்ளார். அந்த வகையில் தற்போதைய தருணத்தில் அந்தச் செயற்பாட்டில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே முடிக்க வேண்டியுள்ளதால் அந்த விடயத்திலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

4. தேசிய இனப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும். தேசியப் பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வரலாற்றில் முதல் தடவையாக வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே, இந்த சிறந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாது எதிர்கால சந்ததியினரை கவனம்செலுத்தி அதற்கானநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து கட்சி தலைவர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

5. இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக போராட வேண்டும்; என்பதோடு அதற்குத் தேவையான சட்டங்களை இயற்றுதல் முக்கியமானதாகின்றது.

6. அடுத்துவரும் காலத்தில் இரண்டு தேர்தல்கள் நடைபெறவுள்ளதால், தேர்தல் முறைமைகள் மற்றும் விதிமுறைகளை திருத்துவதற்காக நியமிக்கப்பட்ட முன்னாள் நீதியரசர் பிரியசாத் டெப் கமிஷன் தலைமையிலான தேர்தர்தல் சட்ட திருத்தத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழு) அறிக்கையை வெளிப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானது.

7. நாடாளுமன்றத்தில் நியமிக்கப்பட்டுள்ள துறைசார் மேற்பார்வைக் குழுக்களை வலுவாகச் செயற்படுத்தப்படும்.

8. அனைத்து சமூகத்தால் வெறுப்படைந்த கட்சி தாவுகின்றசெயற்பாடுகளைத்தடுப்பதற்குத்தேவையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

9. நிறைவேற்றுஜனாதிபதிபதவியைஇரத்துசெய்தல். இந்த விடயத்தில் கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசார காலத்தின்போது ஜனாதிபதியாகிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இறுதிக்கட்டமாக அமையும் என்று பல சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கொள்கை அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். நிறைவேற்று அதிகாரத்தை திடீரென ஒழிக்க முடியாவிட்டாலும், அரசாங்கத்தின் இருப்பை ஒருகுறித்த திகதியை சாதாரண பொதுமக்களுக்கு வாக்குறுதியை வழங்கினால் அது அரசாங்கத்தின் கௌரவத்திற்கும் ஜனாதிபதியின் நற்பெயருக்கும் மேலும் வழிவகுக்கும்.

10. நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கம் சம்பந்தமான கோவை 25 ஆண்டுகளுக்குப் பிறகு, 8 ஆவது நாடாளுமன்றத்தில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீட்டு முறைமை தயாரிக்க முடிந்தது. பிமல் ரத்நாயக்க மிகவும் பெறுமதியான பணியை செய்தார். அதன் அடிப்படையில் ஒழுக்கக் கோவையின் சிலவிதிகளை உள்வாங்க முடியும். இல்லையேல் அவற்றை முழுமையாக அமுலாக்க முடியும்.

மேலும், 2015ஆம்ஆண்டுவரைநிலவியசர்வாதிகார ஆட்சியை மாற்றுவதற்கு வணக்கத்திற்குரிய மாதுலுவே சோபித தேரரின் தலைமையில் சமூகத்திற்கான தேசிய இயக்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. அந்த வகையில் தற்போதும் நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டையும், அனைவரும் இலங்கையர்களாகவும் வாழ்வதற்காக நாம் எந்தவிதமான அரசியல் இணைந்து செயற்பட்டதை நாம் நினைவுகூருகின்றோம். எமக்கு எந்தவொரு அரசியல் நோக்கங்களும் இல்லை என்பதோடு இந்தப் பணியை முன்னெடுப்பது மிகவும் அசியமானது என்றும் தெரிவித்தார்.

# அம்பாறையில் கனமழை போக்குவரத்து சிரமம்



(பாறுக் ஷிஹான்)

வங்காள விரிகுடாவின் தென்கிழக்குப் பகுதியில் தாழமுக்கப் பிரதேசம் உருவாகி தீவிரமடைந்து இலங்கையின் கிழக்குக் கரையை அண்மித்ததாக அடைமழை ஏற்பட்டு வெள்ள நிலைமை காணப்படுகின்றது.

மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான ஆழமான மற்றும் ஆழமற்ற கடல் பிராந்தியங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 60 - 70 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி அதிகரித்து வீசக் கூடும். ஆகையால் குறிப்பிட்ட இக் கடல் பிராந்தியங்களுக்கு இன்று முதல் எதிர்வரும் 28 ஆம் வரையில் மீனவர்களும் கடல்சார் ஊழியர்களும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலும் வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற வானிலை எதிர்வுகூறல்களை கவனத்திற் கொண்டு செயற்படுமாறு பொது மக்கள் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர். பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 20 – 30 கிலோமீற்றர் வேகத்தில் வடகிழக்குத் திசையில் இருந்து காற்று வீசும். எனவே 2024 நவம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 28 ஆம் திகதி வரை வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக அதிக மழைவீழ்ச்சி கிடைக்கக்கூடிய வாய்ப்பு காணப்படுவதால் அனைவரையும் வெள்ள அனர்த்தத்துக்குரிய முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறு அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் எம்.றியாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவு முதல் பெய்த மழையால் தாழ் நிலங்களில் வெள்ள நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் இதுவரையில் எப்பகுதிலும் மக்கள் இடம் பெயர்வுகள் எதுவும் பதிவாகவில்லை. அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அருகில் ஏற்பட்டுள்ள தாளமுக்க நிலையால் இலங்கையின் கிழக்கு பிராந்தியத்தில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு அதிகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் படி பொத்துவில் பிரதேசத்தில் இருந்து தென் கிழக்காக சுமார் 1300 கிலோ மீற்றர் தொலைவில் இது உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே சகல மக்களும் அவதானமாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும்மேலதிகவெள்ளநீர்வடிந்தோடஅக்கரைப்பற்றுஆலையடிவேம்பு சின்னமுகத்துவார கழிமுகம் வெட்டப்பட்டுள்ளது. எனவே ஒரு பாரிய அனர்த்தத்தை எதிர் கொள்ள அம்பாறை மாவட்ட மற்றும் கிழக்கு வாழ் மக்கள் தயாராக இருக்க வேண்டும். இன்னும் மூன்று நாள்களுக்கு அதிக மழை பெய்யும் என்பதால் முன்னாயத்த நடவடிக்கைகளில் இளைஞர்கள் உள்ளூர் சமூக நிறுவனங்கள் அவசரமாக களத்தில் இறங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களான நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, பாண்டிருப்பு, மருதமுனை, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு போன்ற தாழ்நில பகுதிகளில் வெள்ள நீர் பெருக ஆரம்பித்துள்ளன.

தொடர்ச்சியாக கன மழை பெய்வதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் நாளாந்த கூலி வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு தாழ் நிலப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியிருப்பதால் டெங்கு நோய் பெருகக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

அனர்த்தங்கள் நடைபெறும் இடங்களுக்கு கூட்டம் கூட்டமாக பார்வையிடச் செல்வதை தவிர்த்து பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த சில நாள்களாக பெய்துவரும் அடைமழை காரணமாக அப்பகுதியில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்குள் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது வெள்ள நீர் வடிந்தோடுவதற்காக சில முகத்துவாரங்கள் வெட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் வெள்ள நீர் தேங்கி காணப்படுகின்ற நிலைமையே தொடர்கதையாகவுள்ளது.

இந்த மழை வெள்ளத்தின் காரணமாக இம்மாவட்டத்தின் பெரிய நீலாவணை, பாண்டிருப்பு , நற்பிட்டிமுனை , சேனைக்குடியிருப்பு ,காரைதீவு , சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பகுதிகளில் இப்பிரதேசத்தில் பல குடும்பங்கள் வெள்ளத்தால் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளதுடன் தற்போது அங்குள்ள மக்கள் வீடுகளிற்குள் மழை வெள்ளம் உட்புகும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் அரச தனியார் நிறுவனங்கள் கூட வெள்ள நீரால் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கு காரணம் மழை நீர் வழிந்தோடுவதற்குரிய முறையான வடிகால் இன்மையே முக்கிய காரணம் என்ற குற்றச்சாட்டும் மக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

# உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினால் வவுனியா சிற்றி லயன்ஸிக்கு உதவி



வவுனியாசிற்றிலயன்ஸ்கழகத்தினருக்குஅவர்களின் சேவைத்திட்டத்தை மேலும் மெருகூட்டும் வகையில் உரும்பிராய் லயன்ஸ் கழகத்தால் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

உரும்பிராய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ம.மயூரதனால் வவுனியா சிற்றி லயன்ஸ் கழகத்தினருடனான சந்திப்பை மேற்கொண்டதுடன், தேவைப்பாடுடைய மாணவர்களிற்கு வழங்குவதற்காக15ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களும்அவரால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரும்பிராய் லயன் கழக முக்கியஸ்தர் லயன் பா.சஞ்சீவனும் கலந்துகொண்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கான நகர்வுகளை மேற்கொள்க

## கனேடிய ஆளும்தரப்பை வலியுறுத்தி முன்மொழிவு

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான நகர்வுகளை கனேடிய அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என வலியுறுத்தும் முன்மொழிவு அந்நாட்டுப் நாடாளுமன்ற உறுப்பினர் ஷோன் சென்னால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தைச்சேர்ந்த புலம்பெயர் தமிழரான நிருஜன் ஞானகுணாலனால் தயாரிக்கப்பட்டு, அந்நாட்டின் பல்வேறு மாகாணங்களிலும் பரந்துபட்டு வாழும் புலம்பெயர் தமிழர்கள் 636 பேர் கையெழுத்திட்டிருக்கும் ஈ-5058 இலக்க முன்மொழிவையே நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் சென், கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையில்தமது பாரம்பரிய தாயகமான தமிழீழத்தில் 75 வருடங்களுக்கும் மேலாக நீடித்துவரும் இனவழிப்புக்கு முகங்கொடுத்திருக்கும் ஈழத்தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் ‘புலம்பெயர்ந்தோரின் வீடாக’ கனடா திகழ்வதாகவும், இலங்கை அரசால் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை மீறப்பட்டிருப்பதாகவும் அம்முன்மொழிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி - 1956 இல் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரத்திலிருந்து 2009 மேமாதம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட ‘இனவழிப்பு’யுத்தம் வரை தமிழர்களுக்கு எதிராக அரச அனுசரணையுடன்கூடிய இனப்படுகொலை பல்வேறுவழிகளில்முன்னெடுக்கப்பட்டுவந்திருக்கிறது- எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையில் இடம்பெற்ற தமிழினப்படுகொலை தொடர்பில் அதற்குப் பொறுப்புக்கூறவேண்டிய இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான நகர்வுகளை கனேடிய அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என்றும், சுதந்திர தமிழீழ உருவாக்கம் தொடர்பில் இலங்கைவாழ் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் சர்வதேச சமூகத்தின் தலையீட்டுடனான பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்றும் அந்த முன்மொழிவில் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா சிறையில் கைதி ஒருவர் சாவு

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தவறான முடிவெடுத்து கைதியொருவர் சனிக்கிழமை இரவு உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் -

துஷ்பிரயோக குற்றம் ஒன்றுக்காக வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த இந்த கைதி சனிக்கிழமை இரவு சிறைக்கூடத்துக்குள் உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சித்தபோது, உடனடியாக சிறைக்காவலர்கள் அவரை மீட்டு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அப்போது, அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் செட்டிகுளம் பகுதியை சேர்ந்த 57 வயதான நபர் ஆவார்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வெளிவிவகாரச் செயலாளரைச் சந்தித்த சீனா மற்றும் இந்திய இராஜதந்திரிகள்



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் சீனத் தூதுவர் கீ சென் ஹொங் ஆகியோர் வெளியுறவுச் செயலாளர் ரணராஜாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். அவரது நியமனத்துக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ள அவர்கள் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்திய உயர்ஸ்தானிகர் தனது சந்திப்பின் போது வெளிவிவகார செயலாளர் அருணி ரணராஜாவின் புதிய பொறுப்புக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும், பரந்தளவிலான இருதரப்பு விவகாரங்கள் குறித்தும் பன்முகக் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டையும் மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சீன தூதுவர் தனது சந்திப்பில் வெளிவிவகாரச் செயலாளருக்கு வாழ்த்தியுள்ளதோடு, இருதரப்பு உறவுகளின் வளர்ச்சியை மேம்படுத்துதல், இருநாடுகளுக்கு இடையே நடைமுறை ஒத்துழைப்பை ஆழமாக்குதல் மற்றும் பொதுவான அக்கறையுள்ள பிரச்சினைகள் குறித்தும் இரு தரப்பும் ஆழமான கருத்துக்கள் பரிமாற்றிக் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் சீன தூதுவர் புதிய சபாநாயகர் அசோக ரன்வாலாவைச் சந்தித்து, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். மேலும் இந்த சந்திப்பின் போது இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல், இருநாட்டு சட்டமன்ற அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு இடையே பரிமாற்றங்களை வலுப்படுத்துதல் மற்றும் இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் ஆழமான ஒத்துழைப்பை மேம்படுத்துதல் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.11.2024இல் வெளியிடப்பெற்றது